ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,844/6 — 1969 මාර්තු 12 වැනි බදාදා — 1969.3.12
14,844/6 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு மாச்சு மாதம் 12 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1969 இன் இல. 85/1

ம. தே. அ. எண் : சீ 270/65 (4)

1946 ஆம், 1947 ஆம் ஆண்டு இலங்கை (அரசமைப்பு, சுதந்திரம்) அரசப்பேரவைக் கட்டளைகளின் 49 ஆம் பிரிவின்படி, இராச்சிய விவகார கௌரவ அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியும் பாராளுமன்ற உறுப்பினருமான திருவாளர் தொன் பீற்றர் அதபத்து அவர்களை, இராச்சிய விவகார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ ஜூனியஸ் றிச்சாட் ஜயவர்தன அவர்கள் இத்தீவினை வந்தடையும்வரை, 1969 மாச்சு 11 ஆம் திகதியிலிருந்து இராச்சிய விவகார அமைச்சராக கடமையாற்றும்படி மகாதேசாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதி உத்தமனுரின் கட்டளைப்படி,
ஏ. பி. எல்கடுவே,
மகாதேசாதிபதியின் செயலாளர்.

மகாதேசாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1969 ம் ஸ்ரீ மாச்சு மீ 12 ந உ.

3–692

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி 462

உப உணவுப் பொருட்கள்—கடலை பயறு வகை

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினல் (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி புவனேகபாகு பியன்கே விக்டர் அலெக்சான்டர் யஸ்ரின் பூர்ணவண்ச சேனரெட்னே ஆகிய யான் இக் கட்டளையால்—

(1) 1969 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ம் தேதி வெளியான 14,842/2 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1969 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 22 ந் தேதியைக் கொண்ட சி 460 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(2) இதனேடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம் வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும்,

இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும், ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு, அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில், விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென அஞ்ஞையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ந் திகதியன்று முற்பகல் 11.30 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

பு. பி. வி. அ. ய. பூ. சேனரட்னே,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1 விபரம் | பத்தி 2 இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆக்ககூடிய இறக்கு மதி விலை | பத்தி 3 மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக் கூடிய மொத்த விலை | பத்தி 4 சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. சிந்தாமணிக்கடலை | 44 25 | 46 0 | 0 48 |
| 2. தட்டப்பயறு (கௌபீஸ்) | 35 0 | 36 75 | 0 38 |
| 3. கடலைப் பருப்பு | — | 52 80 | 0 52 |
| 4. பாசிப்பயறு | 52 50 | 54 25 | 0 56 |
| 5. உளுத்தம் பருப்பு | 54 25 | 56 0 | 0 58 |
| 6. முழு உளுந்து | 47 0 | 48 75 | 0 50 |
| 7. துவரம் பருப்பு | 59 0 | 60 75 | 0 62 |
| 8. கொண்டைக்கடலை | 41 0 | 42 75 | 0 44 |
| 9. சீனு வட்டாணு பருப்பு | 48 0 | 50 0 | 0 55 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையையுடைய ஒரு விற்பனையைக் குறிப்பதாகும்.

3–693

---

விலைக்கட்டளை இல. ஜி. 1–1969 — உப உணவுப் பொருட்கள்—கடலை, பயறுவகை

## விலைக்கட்டுப்பாட்டுச்சட்டம்

### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவின் அதன் 3 (2) உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்ட தத்துவங் களைக்கொண்டு காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சாள்ஸ் அபயதீரா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1968 ம் ஆண்டு செப்டம்பர் 17 ந் திகதி வெளியான 14,819/6 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 12 ந் திகதி செப்டம்பர் மாதம் 1968 ம் ஆண்டின் ஜி 5 இலக்கங் கொண்ட எனது விலைக்கட்டளையை இத்தேதியிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(2) கொழும்பு நகரசபை எல்லைகட்குள் விற்கப்படவென விலைகளின் கட்டுப்பாட்டுச் சட்டம் 173 ம் அத்தியாயத்தின் பிரகாரம் தற்காலிகமாக விதிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விலைகள் இதனோடு அணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் 3 ம் பத்தியில் கூறப்படும் தொகைகளால் அதிகரிக்கப்பட்டு ஒரு மொத்த வியாபாரியினது ஒரு அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலையின் சார்பாக உள்ள 1 ம் பத்தியிற் கூறப்படும் பொருட்களின் விலைகள் இரண்டாம் பத்தியிற் கூறப்படும் எல்லைக்கு முறையே உரிய விலை களாக ஆஞ்ஞையிடுகிறேன் ; இவ் எல்லைக்குள் இவ்விலைகட்கு கூடுதலாக் அப்பொருட்களை விற்கலாகாது.

(3) கொழும்பு நகரசபை எல்லைகட்குள் விற்கப்படவென விலைகளின் கட்டுப்பாட்டுச் சட்டம் 173 ம் அத்தியாயத்தின் பிரகாரம் தற்காலிக மாக விதிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலைகள் இதனோடு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் 4 ம் பத்தியிற் கூறப்படும் தொகையால் அதிகரிக்கப்பட்ட ஒரு சில்லறை வியாபாரியினது நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையின் சார்பாக உள்ள 1 ம் பத்தியிற் கூறப்படும் பொருளின் விலை 2 ம் பத்தியில் கூறப்படும் எல்லைக்கு முறையே உரிய விலையாகவும் ; மேற் குறிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் அல்லது 2 ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள அதிகாரவட்டத்துள் இவ் விலைக்குக் கூடுதலாக அப்பொருளை விற்கலாகாது என்றும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) இதனோடு இருக்கும் அட்டவணையின் முதலாவது பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் ஒரு அந்தர் அல்லது அதற்கு மேலான தொகையில் விற்றல் அல்லது திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) இதனோடு இருக்கும் அட்டவணையின் முதலாவது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த தொகையில் பாவனைக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த இடப்பரப்பிலும், இதனோடிருக்கும் அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் வேறு ஒரு பொருளோடுங் கலந்து விற்கலாகாது என ஆணையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் இதனோடிருக்கும் அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பொருளினதும் சிறு தொகையினைத் தகுந்ததொரு கொள்கலத்தில் வைத்து, அவ்வப் பொருளுக்கு இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக் கூடுதலான விலைகளை ஒரு அங்குலப் பிரமாண உயரத்திற்கு குறையாத எண்களில் விலையட்டைகளிலோ அல்லது பலகைகளிலோ எழுதி அவ்வப் பொருளுக்கு உரிய விலையினை அவ்வப்பொருளின் சிறு தொகையினைக் கொண்ட கொள் கலங்களில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக “ இருத்தல் ” அல்லது “ இரு. ” என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் இதனோடிருக்கும் அட்டவணையின் 1 வது பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள் எதனையும் விற்கும் ஒவ்வொருவரும் அதே அட்டவணையின் அதே பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள அதே பொருட்களுள் எதனையும் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு வழங்கவேண்டுமென ஆணையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்கு கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்வித விற்பனை அதாவது, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) இதனோடிருக்கும் அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் பொருட்களுள் ஏதாவதொன்று விற்கப்படுமிடத்து அவ்வட்டவணையின் 3 வது, 4 வது பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 9 ந் திகதி காலை 11.00 மணிக்கு காலியில் கைச்சாத்திடப்பட்டது.

சா. அபயதீரா,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
காலி பரிபாலன மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>பொருளின் விபரம் | பத்தி 2<br>பகுதி அல்லது பரிபாலனப் பிரிவு | பத்தி 3<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலையின் மேலதிக விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையின் மேலதிக விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| உழுந்து (தோலுடன்), பயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, சிந்தாமணிக்கடலை, கொண்டைக்கடலை, மசூர்ப் பருப்பு, தட்டப் பயறு (கௌபீஸ்) உழுத்தம்பருப்பு, சீன வட்டாணு பருப்பு | பெந்தொட்ட ப. ச. பகுதி, இந்துருவ கி.ச. பகுதி, பஹல கம்ஹைய கி.ச. பகுதி, கொஸ்கொட கி.ச. பகுதி, ஊறகஸ்மன்ஹந்திய கி. ச. பகுதி .. | 2 72 .. | 0 2 |
| உழுந்து (தோலுடன்), பயறு, துவரம் பருப்பு, கடலைப்பருப்பு, சிந்தாமணிக்கடலை, கொண்டைக்கடலை, மசூர்ப்பருப்பு, தட்டப்பயறு (கௌபீஸ்) உழுத்தம்பருப்பு, சீன வட்டாணு பருப்பு | காலி மாநகரசபை பகுதியும், நாலு முறிவுப் பகுதியும், அம்பலாங்கொட ந. ச. பகுதி, வத்து கெதற ப. ச. பகுதி, எல்பிட்டிய ப. ச. பகுதி, பலப்பிட்டிய ப. ச. பகுதி, ஹிக்கடுவ ப. ச. பகுதி, தொடந்துவ ப. ச. ப்குதி, அம்பன பினி கஹன கி. ச. பகுதி, கொனுவாமுல்ல ஓமத்த கி. ச. பகுதி, கோணபினுவல மிற்றியாகொட கி. ச. பகுதி, தொற்றகமுவ—திருனகம கி. ச. பகுதி, கறந்தெனியா கி. ச. பகுதி, பட்டபொய கி. ச. பகுதி, மாதம்பை கி. ச. பகுதி, வெர கொட கி. ச. பகுதி, றத்கம கி. ச. பகுதி, போப்பே கி. ச. பகுதி, பத்தகம கி. ச. பகுதி | 2 86 .. | 0 3 |
| உழுந்து (தோலுடன்), பயறு, துவரம் பருப்பு, கடலைப்பருப்பு, சிந்தாமணிக்கடலை, கொண்டைக்கடலை, மசூர்ப் பருப்பு, தட்டப்பயறு, (கௌபீஸ்) உழுத்தம்பருப்பு, சீன வட்டாணு பருப்பு | அகங்கம ப. ச. பகுதி, அக்மீமன கி. ச. பகுதி, ஹபருதுவ கி. ச. பகுதி, கோதாகொட கி. ச. பகுதி, கொட்ட்வ கி. ச. பகுதி, பொல்பகொட கி. ச. பகுதி, நாகொட கி. ச. பகுதி, போத்தல கி. ச. பகுதி, வந்துரம்ப கி. ச. பகுதி, தெலிகட மாயூவான கி. ச. பகுதி, வெலிவிற்றிய திவிதுற கி. ச. பகுதி, பிற்றிகலவெயிஹேன கி. ச. பகுதி, போத்திவெல நியாயகம கி. ச. பகுதி, கத்தலுவ கி. ச. பகுதி, பிலான மட்டரம்ப கி. ச. பகுதி, பற கொட கி. ச. பகுதி, உடுகம கி. ச. பகுதி, யட்டல மத்த, கஹந்த நாகந்த கி. ச. பகுதிகள் | 3 05 .. | 0 3 |
| உழுந்து (தோலுடன்), பயறு, துவரம் பருப்பு, கடலைப்பருப்பு, சிந்தாமணிக் கடலை, கொண்டைக்கடலை, மசூர்ப் பருப்பு, தட்டப்பயறு, (கௌபீஸ்) உழுத்தம்பருப்பு, சீன வட்டாணு பருப்பு | ஹினிதும கி. ச. பகுதி, ஓப்பாத்த கி. ச. பகுதி, நெலுவ கி. ச. பகுதி, தெல்லவ கி. ச. பகுதி | 3 11 .. | 0 3 |

**குறிப்பு.**—மேற்குறிப்பிட்டுள்ள தொகைகள் உரிய விலையாகாவிட்டாலும், அவற்றிற்கு **மேலதிகமாக** பொருளை விற்பனை செய்யக்கூடாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

3-694

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.